**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 52/2023**
**நாள் 21/11/2025 வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878 ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ராயப்பு ஸ்ரீ தனுசாவுக்காக அவருடைய தாயார் ராயப்பு மாதவி (PW1) | க/பெயர் – கார்த்திக் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. மனு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய மகள் ராயப்பு ஸ்ரீ தனுஷா என்பவருக்கு விபத்து ஏற்பட்டது அதனால் நஷ்ட ஈடு கேட்டு தாக்கல் செய்துள்ளேன். விபத்து எப்போது எங்கு நடந்தது என்றால் 24.09.2022 தேதியன்று இரவு சுமார் 08.30 மணியளவில் என் சித்தப்பா இருசக்கர வாகனத்தை ஓட்ட முன்னால் என்மகளை அமரவைத்து என் சித்தப்பாவிற்கு பின்னால் சித்தியும், அவருக்கு பின்னால் நானும் அமர்ந்து ரேனுகுன்டாவில் இருந்து காலஹஸ்திரிக்கு சென்றுக்கொண்டிருந்தபோது யுகாதி ே ஹாட்டல் அருகே எங்களுக்கு எதிரே வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து சமயத்தில் என் மகளுக்கு தலைகவசம் அணிவித்திருக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் என் மகளுக்கு எங்கு அடிப்பட்டது என்றால் தலையில் அடிப்பட்டது.

2. எந்த மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டது என்றால் இரமாதேவி மருத்துவமனையில் 1 மாதம் சிகிச்சை பெற்றார். அறுவை சிகிச்சை செய்யப்பட்டதா என்றால் ஆமாம், தலையில் அறுவை சிகிச்சை செய்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள ம.சா ஆ 6 மருத்துவ விடுவிப்பு அறிக்கையின் படி 24.09.2022 மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 08.10.2022 தேதி மருத்துவமனையில் இருந்து என் மகள் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டபின்னர் அடிக்கடி மருத்துவமனையில் தொடர் சிகிச்சையில் சென்றோம். மேலும் நானும் விபத்தில் காயமடைந்து அதே மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் அதனால் முழுவிவரங்கள் எனக்கு தெரியாது.

3. விபத்து சமயத்தில் என் மகளுக்கு என்ன வயது என்றால் 5 வயது, யுகேஜி படித்துக்கொண்டிருந்தார். தற்போது என்ன படித்துக்கொண்டிருக்கிறார் என்றால் 3 ம் வகுப்பு படிக்கிறார். அடிக்கடி தலைவலி வருகிறது பள்ளிக்கு சரியாக செல்லமுடியவில்லை. விபத்து குறித்து யார் காவல் நிலையத்தில் புகா' கொடுத்தது என்றால் என் சித்தப்பாவின் அப்பா கொடுத்தார். 2 நாட்கள் காலதாமதமாகதான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4 நபர்கள் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்றதால் தான் எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரே வந்த கார் தான் அதிவேகமாக வந்து மோதிவிட்டது. விபத்து குறித்து குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் எதுவும் அளித்துள்ளேனா என்றால் திருப்பதி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன்.

4. நான் சென்ற வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரையும் இருசக்கர வாகதன்தின் காப்பீட்டு நிறுவனத்தையும் மனுவில் சேர்த்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை ஓட்டிய என் சித்தப்பாவிற்கு ஓட்டுநர் உாிமம் உள்ளதா என்றால் உள்ளது. ஆனால், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்தில் காயமடைந்தது சம்மந்தமாக நானும் என் சித்தியும் மனுதாக்கல் செய்துள்ளோம் என்றும் அந்த மனுக்கள் பொன்னேரி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

5. என் மகளுக்கு ஏற்ப்பட்ட காயங்கள் சொர்ப்பகாயங்கள் தான் என்றும் அதுவும் தற்போது சரியாகிவிட்ட காரணத்தினால் தான் அவரால் பள்ளிக்கு செல்ல முடிகிறது என்றும், அவருக்கு எந்தவித இயலாமையும் இல்லாத காரணத்தில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் நஷ்ட ஈடு வழங்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**